

காஞ்சிபுரம் தனியார் திருமண மஹாலில் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் நினைவு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம், கல்வி, சுயதொழில் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் அமைச்சர் .ஆர்.காந்தி டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார் . உடன் மாவட்ட ஆட்சியர் கலைச்செல்வி மோகன், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் க.சுந்தர், சி.வி.எம்.பி.எழிலரசன், மேயர் எம்.மகாலட்சுமி யுவராஜ், மலர்க்கொடி குமார் உள்ளிட்ட அதிகாரிகள் உடன் உள்ளனர்.



திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் தலைமையை ஏற்று தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் எஸ்.டி.பி.ஐ. கட்சியைச் சேர்ந்த 150 பேர் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி முன்னிலையில் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர். தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் அனைவரையும் வரவேற்றார்.உடன் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளர் சூர்யா வெற்றி கொண்டான்,கழக நிர்வாகிகள் கென்னடி,கனிமொழி, ஷெரிப்,முத்துப்பாண்டி,ஷேக் தாவூது, ஆறுமுக சாமி,சேசுராஜன்,சாமிதுரை, அப்துல்காதர்,சீனித்துரை,அன்பழகன் அழகு சுந்தரம்,ரமேஷ்,சேக்முகமது, திவான் ஒலி,சுரேஷ்,மணிகண்டன், வெங்கடேசன்,அப்பாஸ்,ரேப்பா,மூப்பன் ஹபீபுர் ரகுமான் உட்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.

### என்.டி.ஏ.வின் நடவடிக்கை நியாயமற்றது! பி.எட் மாணவர்களுக்கு

# தமிழ்நாட்டிற்குள்ளேயே தேர்வு மையங்களை மறு ஒதுக்கீடு செய்திடுக!

### ஒன்றிய கல்வி அமைச்சருக்கு – மூத்த வழக்கறிஞர் பி. வில்சன் எம்.பி. கடிதம்!



புதுடெல்லி, டிச.8-

மாநிலங்களவை உறுப்பினர்பி.வில்சன் ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்தர பிரதானுக்கு எழுதிய கடிதத்தின் முக்கிய குறிப்புகள் வருமாறு:-

தமிழ்நாட்டைச் சேர்ந்த பி.எட். மாணவர்கள் 2025 ஆம் ஆண்டிற்கான ஜூலை மாத SWAYAM செமஸ்டர் தேர்வுகளை டிசம்பர் 15 மற்றும் 16 ஆம் தேதிகளில் எழுதவிருக்கிறார்கள்.

ஆனால் தமிழகத்தைச் சேர்ந்த மிகப்பெரிய எண்ணிக்கையிலான மாணவர்கள், தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் உட்பட - பலரும் தாங்கள் தமிழ்நாட்டிற்குள்ளேயே தேர்வு மையத்தைத் தேர்ந்தெடுத்திருந்த போதிலும், கர்நாடகா மற்றும் கேரளா மாநிலங்களில் உள்ள மைசூர், மங்களூர், பெங்களூர் போன்ற இடங்களில் தேர்வு மையங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

தேர்வை நடத்தும் தேசிய தேர்வு முகமை (NTA)யின் இந்த நடவடிக்கை நியாயமற்றது மற்றும் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி நலனுக்கு தீவிரமாக கேடு விளைவிப்பதாகும்.

ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களின் எண்ணிக்கையில் நாட்டிலேயே முன்னோடியாக விளங்கும் தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கான பி.எட். மாணவர்கள் SWAYAM தேர்வு மூலமே தங்களது பல்கலைக் கழகப் பாடத்திட்ட முடிவுச் சான்றிதழைப் பெற வேண்டிய நிலை உள்ளது.

இந்நிலையில், மாணவர்களை பல நூறு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள வேறு மாநிலங்களுக்கு பயணிக்க வைப்பது - குறிப்பாக கிராமப்புறத்தைச் சேர்ந்த, பொருளாதார ரீதியாக பின்தங்கிய மாணவர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது.

பயணச் செலவு, தங்குமிடச் செலவு ஆகியவற்றை ஏற்க இயலாத அளவுக்கு பெரும் சுமையை மாணவர்களுக்கு ஏற்படுத்தி உள்ளது.

தேர்வுக்கு பத்து நாட்களுக்கும் குறைவாக மட்டுமே உள்ள நிலையில், இந்த வகை ஒதுக்கீடுகள் மாணவர்களின் மனஅழுத்தத்தையும், அவர்களின் தயாரிப்பையும் கடுமையாக பாதிக்கின்றன.

இந்த அநீதியை உடனடியாக சரிசெய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் இது எதேச்சையாக நடந்த நிகழ்வாக தெரியவில்லை, NTA நடத்த கூடிய NEET, NEETPG உள்ளிட்ட பல தேசிய அளவிலான நுழைவுத் தேர்வுகளிலும், ஆட்சேர்ப்புத் தேர்வு களிலும் இதே போன்ற பிரச்சனைகள் மீண்டும் மீண்டும் நிகழ்ந்து, பரவலான விமர்சனங்களை யும், நாடாளுமன்றத்தில் கேள்விகளையும் எழுப்பியுள்ளன.

இவை தொடர்ந்து நிகழ்வது வெறும் கவனக்குறைவு அல்ல, மாறாக NTAயின் அமைப்பு ரீதியான தோல்வியையே காட்டுகிறது;

நியாயமான தேர்வு முறையை உறுதி செய்ய அது தவறிவிட்டது என்றே தோன்றுகிறது.

தமிழ்நாட்டுக்குள் போதிய அளவு தேர்வு மையங்கள் இருந்தும், மாணவர்களை அண்டை மாநிலங்களுக்கு தள்ளுவது தவிர்க்க முடியாத கஷ்டத்தை ஏற்படுத்துவதோடு, அவர்களின் கல்வி எதிர்காலத்தையே ஆபத்தில் தள்ளுகிறது.

இது தேர்வுகளின் வெளிப்படைத் தன்மை , சம வாய்ப்பு, மாநில நலன்கள் உரிமைகளையே கேள்விக்குள்ளாக்குகிறது.

எனவே, தேர்வு தேதி நெருங்கிவரும் சூழலில், பாதிக்கப்பட்ட அனைத்து தமிழ்நாட்டு மாணவர்களுக்கும் உடனடியாக தேர்வு மையங்களை மாற்றி தமிழ் நாட்டிற்குள்ளேயே மறு ஒதுக்கீடு செய்யுமாறும், குறிப்பாக மாணவர்கள் முதலில் தேர்ந்தெடுத்த இடங்களுக்கு முன்னுரிமை அளித்து - தேர்வு மையங்களை ஒதுக்கீடு செய்யுமாறும் NTAக்கு உடனடி உத்தரவு பிறப்பிக்கும்படி உங்களை அவசரமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அநீதியை உடனடியாக சரிசெய்யத் தவறினால், தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மாணவர்களின் ஆசிரியர் கனவு பறிபோகும் அவல நிலை ஏற்படும்.

மேலும், தேசியத் தேர்வுகள் இனிமேலாவது எந்த ஒரு மாநிலத்தையும் பாதிக்காத வகையில் நடைபெறவும், வெளிப்படைத்தன்மை, அணுகல்தன்மை, நேர்மை ஆகியவை நமது நாட்டின் கல்விக் கொள்கையின் அடிப்படைக் கொள்கைகளாகத் தொடர்ந்து இருக்கவும் உங்களது உடனடி நடவடிக்கையை எதிர்பார்க்கி றேன்.

இவ்வாறு அவர் கடிதத்தில் கூறியுள்ளார்.


### கோயிலில் கலைகளை வளருங்கள்; கலவரத்தை வளர்க்காதீர்கள்!

# மக்கள் சகோதரத்துவத்தோடு வாழ எந்தத் தியாகத்திற்கும் தயார்!

### மத நல்லிணக்கத்தைக் காப்பாற்றிய முதலமைச்சருக்கு – அமைச்சர் பி.கே.சேகர்பாபு புகழாரம்!

**சென்னை, டிச.8 -**

**“கோயிலில் கலைகளை வளருங்கள்; கலவரத்தை வளர்க்காதீர்கள்; ஆண்டவனிடம், மக்களிடத்தில் ஆன்மிகத்தை வளருங்கள்; அபாயத்தை வளர்க்காதீர்கள்; மத நல்லிணக்கத்தைக் காப்பாற்றிய முதலமைச்சர், நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்” என்றார், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு கூறினார்.**



சென்னை துறைமுகத்தில் நடைபெற்ற தி.மு.க. இளைஞரணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவில், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வாழ்த்துரையாற்றினார்.

அவரது வாழ்த்துரையில் குறிப்பிட்டதாவது:-

இன்றைக்கு நாட்டிலே மதத்தால், இனத்தால், மொழியால் மக்களைப் பிளவுபடுத்துகின்ற சக்திகள் ஊடுருவி தலைதூக்கிக் கொண்டிருக்கின்றன. எந்தவொரு நாடாக இருந்தாலும், எந்தவொரு அரசாக இருந்தாலும், கடந்த இரண்டு, மூன்று நாள்களில் நடைபெற்ற நிகழ்வுகளால் சற்று தலை கவிழ்ந்திருப்பார்கள், அடிபணிந்திருப்பார்கள். ஆனால், நிமிர்ந்த நடை, நேர் கொண்ட பார்வையோடு, யாருக்கும் அஞ்சாமல், “என் இன மக்கள் சகோதரத்துவத்தோடு வாழ்வதற்கு எதை வேண்டுமானாலும் பறிகொடுக்கத் தயார்” என்று உறுதியாக நின்று, மத நல்லிணக்கத்தைக் காப்பாற்றிய முதலமைச்சர், நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் என்றால், அது மிகையாகாது.

ஆனால், வடபுலத்தில் ராமனை வைத்து லாபம் பார்த்தவர்கள், இங்கே முருகனைக் கையிலே வைத்து ஆட்டம் போடலாம் என்று நினைக்கிறார்கள்.

2021 ஆம் ஆண்டு வேலைக் கையிலே சுமந்து நடந்து பார்த்தார்கள்; நடக்கவில்லை. அதன் பிறகு, 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலும் அதை மீண்டும் அரங்கேற்றப் பார்த்தார்கள், அது முடியவில்லை.

ஆனால், தற்போது காவடி என்கிறார்கள், வேல் என்கிறார்கள், அரோகரா என்கிறார்கள்; நீங்கள் எந்தக் கூப்பாடு போட்டாலும், தமிழ்க் கடவுள் முருகன் எங்கள் முதலமைச்ச ருக்குச் சொந்தமானவர் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

**தெளிவாக இருக்கின்றார்கள்!**

முருகனுக்குப் பெருமை சேர்த்த ஓர் ஆட்சி உண்டென்றால், முருகன் புகழுக்குப் புகழ் சேர்த்த ஓர் ஆட்சி உண்டென்றால், அனைத்து மக்களும் அவரவர் விரும்புகின்ற வழிபாடுகளை, சுதந்திரமாக, முழு அமைதியோடு, முழு பாதுகாப்போடு, மத நல்லிணக்கம் பேணுகின்ற ஓர் ஆட்சி நடக்கின்றது என்றால், அந்த ஆட்சி, ‘திராவிட மாடல்’ ஆட்சி, எங்கள் உயிரினும் மேலான அன்புத் தலைவரின் ஆட்சி என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்யக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

கொண்டாடுங்கள், கோயிலில் கலைகளை வளருங்கள்; கலவரத்தை வளர்க்காதீர்கள்!

ஆண்டவனிடம், மக்களிடத்தில் ஆன்மிகத்தை வளருங்கள்; அபாயத்தை வளர்க்காதீர்கள்!

நீங்கள் எந்த முனையில் இருந்து எப்படி தாக்குதல்கள் நடத்தினாலும், அந்தத் தாக்குல்களை முறியடித்து, மீண்டும் 2026 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் ‘திராவிட மாடல்’ ஆட்சிதான் என்பதை உறுதியோடு இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

எனதருமை வட இந்திய மக்களே, உங்களுக்குத் தொழில் பாதுகாப்பு, உங்களுக்குப் பணிப் பாதுகாப்பு, உங்களுடைய வாழ்வாதாரப் பாதுகாப்பிற்குத் திராவிட முன்னேற்றக் கழகம் துறைமுகத்திலே எப்போதும் துணை நிற்கும். நீங்களும் எங்களுக்குத் துணையாக இருங்கள்.

இன்றைக்குப் பிறந்த நாள் காணுகின்ற அருமை அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்களை, வருகை தந்திருக்கின்ற அனைத்து வட இந்திய என் தமிழ்ப் பேசும் மக்கள், மனதார வாழ்த்துங்கள்.

இன்னுமொரு நூறாண்டு காலம் அவர் வாழ்வார் என்று கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சசர் பி.கே.சேகர்பாபு அவர்கள் வாழ்த்துரையாற்றினார்.

# மக்களவையில் மூன்று தனிநபர் மசோதாக்கள்!

### தமிழச்சி தங்கபாண்டியன் அறிமுகம் செய்தார்!

புதுடெல்லி, டிச. 8-

நாட்டு மக்கள் நலனை முன்னிலைப்படுத்தும் வகையில், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், நடைபெற்று வரும் மக்களவையில், தனிநபர் மசோதாக்கள் மீதான விவாத்த்தில் கலந்துகொண்டு, மூன்று முக்கிய தனிநபர் மசோதாக்களை அறிமுகம் செய்து குறிப்பிடத்தக்க கவனத்தை ஈர்த்தார்.

1. மார்பகப் புற்றுநோய் (விழிப்புணர்வு) மசோதா - 2024

பெண்கள் ஆரோக்கியத்தை பாதுகாக்கும் நோக்கில், இந்தியாவில் அதிகரித்து வரும் மார்பகப் புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சைக்கு வழிவகுக்கும் வகையில் இந்த மசோதா கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த மசோதா மூலம் பொது மக்களிடையே தொடர்ந்து விழிப்புணர்வு முகாம்கள், இலவச பரிசோதனை முகாம்கள், மற்றும் அரசு-தனியார் இணைந்து செயல்படும் திட்டங்கள் முன்மொழியப்படுகின்றன.



2. டிஜிட்டல் தனிநபர் தரவு பாதுகாப்பு (திருத்தம்) மசோதா - 2024

நாட்டில் வேகமாக வளர்ந்து வரும் டிஜிட்டல் சூழலில், குடிமக்களின் தனிநபர் தகவல்களை பாதுகாப்பது மிகப்பெரிய சவாலாக மாறியுள்ளது. அதனை கருத்தில் கொண்டு, உள்ள சட்டத்தில் உள்ள குறைகளை நீக்கி, தகவல் பாதுகாப்பை வலுப்படுத்தும் நோக்கில் இந்த திருத்த மசோதா முன்வைக்கப்பட்டது. டிஜிட்டல் தரவு பயன்பாடு, சேமிப்பு, மூன்றாம் தரப்புக் கையாண்டல் ஆகியவற்றுக்கு தெளிவான வழிகாட்டுதல்களை நிலை நிறுத்துவதே இந்த மசோதாவின் அடிப்படை நோக்கமாகும்.

3. வீட்டு உதவியாளர்கள் (வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நிலைகளை ஒழுங்கு படுத்துதல்) மசோதா - 2024

நாட்டின் பெரும் எண்ணிக்கையான வீட்டு உதவியாளர்களுக்கு சட்டரீதியான பாதுகாப்பு கிடைக் காத நிலையை மாற்றும் வகையில் இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சரியான ஊதியம், வேலை நேரம், பாதுகாப்பு, நலத் திட்டங்கள், மற்றும் பலாத்காரத்திலிருந்து பாதுகாப்பு உள்ளிட்ட உரிமைகளை சட்டப்பூர்வமாக வழங்கும் முயற்சியாக இது அமைகிறது.

மக்களவையில் இந்த மசோதாக்களை அறிமுகப்படுத்திய தமிழச்சி தங்கபாண்டியன், “பெண்கள் ஆரோக்கியம், குடி மக்களின் தரவு பாதுகாப்பு, மற்றும் வீட்டு உதவியாளர்களின் அடிப்படை உரிமை கள் - இவை அனைத்தும் இன்றைய சமூகத்தில் அத்தியாவசியமானவை. மக்களுக்காக, சமூக நலனுக்காக இந்த மசோதாக்களை கொண்டு வந்துள்ளேன்,” என தெரிவித்தார்.

# ஒழுங்கு நடவடிக்கை

## தலைமைக் கழக அறிவிப்பு

ஈரோடு வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் கே.கே. செல்வம் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600018
நாள்- 7.12.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில்

# சென்னை தென் மேற்கு மாவட்ட இளைஞர் அணி கூட்டம்!

### மாவட்ட அமைப்பாளர் ராஜா அன்பழகன் அறிக்கை!

சென்னை, டிச். 8 -

கழக தலைவர் முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் சிறப்புரை ஆற்றிட, கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் வருகிற 14-12-2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி அளவில் திருவண்ணாமலை, “கலைஞர் திடலில்” வடக்கு மண்டல தி.மு.க இளைஞரணி நிர்வாகிகள் சந்திப்பு நடைபெற உள்ளது.

எனவே அந்நிகழ்வில் சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் பெருந்திரளாக கலந்து கொள்ளவது குறித்து மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அவர்கள் ஆலோசனை வழங்குகிறார்,

பகுதிக் கழகச் செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ, கே.ஏழுமலை எம்.சி, நந்தனம் மதி எம்.சி, எஸ். முரளி ஆகியோரின் முன்னிலையில், மாவட்ட துணை அமைப்பாளர்கள் எஸ்.உமா சங்கர், தினேஷ் மாணிக்கம், த. விக்னேஷ்வரன், எ.அஸ்வின்குமார், டேண்டி பிரகாஷ் வரவேற்பில், எனது தலைமையில் (ராஜா அன்பழகன் எம்.சி) திங்கட்கிழமை (08-12-2025) மாலை 6 மணிக்கு, மயிலை சி.பி.ராமசாமி சாலையில் உள்ள சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் சென்னை தென் மேற்கு மாவட்ட இளைஞர் அணி கூட்டம் நடைபெறுகிறது.

எனவே இக்கூட்டத்தில் இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் மற்றும் பகுதி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று மாவட்ட அமைப்பாளர் ராஜா அன்பழகன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

### லிட்டில்ஹெர்ட்ஸ் ஆதரவற்ற குழந்தைகளுக்கு அறுசுவை உணவு – இனிப்பு!

# இடைக்கழிநாடு - 21 வார்டுகளிலும் துணை முதல்வர் பிறந்தநாள் விழா!

### பேரூர் செயலாளர் டி, மோகன்தாஸ் தலைமையில் கழகத்தினர் பங்கேற்பு!

காஞ்சிபுரம், டிச.8-

காஞ்சி தெற்கு மாவட்டம் இடைக்கழிநாடு பேரூராட்சி 21 வார்டுகளிலும், முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் அறிவுறுத்தலின் பேரில் மாநில இளைஞரணி செயலாளர் மற்றும் துணை முதல்வர்

உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வில் ஏராளமான குழந்தைகள், பெரியவர்கள் மற்றும் கடப்பாக்கம் பகுதியில் உள்ள லிட்டில் ஹெர்ட்ஸ் ஆதரவற்ற குழந்தைகளுக்கு கேக் வெட்டி சுவையான மதிய உணவு மற்றும் இனிப்புகள் வழங்கல் பேரூர் செயலாளர் டி.மோகன்தாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் ச.இனியரசு மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு மாவட்ட துணை அமைப்பாளர் பி சாமிநாதன், மாவட்ட மீனவரணி துணை அமைப்பாளர் தேசமுத்து, பேரூர் அவைத் தலைவர் அருணா, ஒன்றிய பிரதிநிதி பக்ருதீன் அலி அகமது, பேரூராட்சி தலைவர் சம்யுகத்தா ஐயனார், அன்னப்பன், கிளை செயலாளர்கள் பஷீர்,கச்சி மொய்தீன்,அழஷண்முகம், முன்னாள் கிளை செயலாளர், மன்ற உறுப்பினர் சுசீலா ஆறுமுகம், இலக்கிய அணி முன்னாள் பேரூர் துணை அமைப்பாளர் ரா. செந்தில் குமார், உதயா, ராஜேந்திரன், கண்ணப்பன், இளைஞர் அணி பேரூர் அமைப்பாளர் ரிப்பாய் , துணை அமைப்பாளர்கள் தீபக், அப்துல் மாலிக், பேரூர் தகவல் தொழில்நுடப அணி அமைப்பாளர் அருள்நிதி, கெஜா, ராஜேந்திரன், மணி மற்றும் கழக உடன்பிறப்புகள், பொதுமக்கள் என திரளாக கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு ஆவடி அடுத்த திருமுல்லைவாயிலில் அமைந்துள்ள அவரது திருவுருவச்சிலைக்கு தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர் அருகில் மாநகர மேயர் ஜி.உதயகுமார் , மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ், பகுதி கழக செயலாளர்கள் ஜி.நாராயணபிரசாத் , பொன்.விஜயன், வழக்கறிஞர் பெ.வினோத், மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி பொழிச்சலூர் ஊராட்சியில் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ கலந்துகொண்டு முகாமை துவக்கி வைத்து இல்லம் தேடி மருத்துவம் மகப்பேறு கர்ப்பிணி தாய்மார்கள் ஆகியோர்களுக்கு மருத்துவப் பெட்டகங்களை வழங்கினார் அப்பொழுது ஊராட்சி மன்ற தலைவர் வனஜா தயாளன் துணைத் தலைவர் ஜோசப் வட்டார மருத்துவ அலுவலர்கள் ஒன்றிய நிர்வாகிகள் செல்வராஜ், ராஜா,ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் ஊராட்சி கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.